

(T.V. செய்திகள்)

# விசுவாசப் பெண் அன்னாள்

**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். இன்றைய நாளிலும், நாம் வேதாகமத்திலே சொல்லப்பட்ட விசுவாச பெண்மணி அன்னாளைப் பற்றி படிப்பதற்கு நம்முடைய மனதை செலுத்துவோம்.

பிரியமானவர்களே! அன்னாளுக்கு ஒரு பெரிய சிறப்பு இருந்தது. அவள் ஜெபிக்கின்ற ஒரு தாயாக இருந்தாள். ஏன் இந்த அன்னாளை பற்றி நாம் படிக்க தேர்வு செய்திருக்கின்றோம்? ஏனென்றால், இந்த செய்தி வயதான சகோதரிகள், வாலிப பெண் பிள்ளைகள் என அனைவருக்கும் மிகவும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

வேதாகமத்தில் குழந்தையில்லாமல், மற்றவர்களால் குறை சொல்லப்பட்ட நிறைய பெண்கள் இருக்கிறார்கள். சாராள், ரெபேக்காள், ராகேல் இவர்களெல்லாம் குறிப்பிடத்தக்கவர்கள். சாராளுக்கு குழந்தை பிறக்கும் என்று சொன்ன பொழுது நகைத்தாள். ரெபேக்காளுக்கு குழந்தையைப் பற்றிய பிரச்சனை வந்தபோது, அவள் வேறுபட்டதான எண்ணம் கொண்டவளாயிருந்தாள். ராகேலுக்கு குழந்தையில்லை என்ற நிலை வந்தபோது அவள் எரிச்சலடைந்தாள். இப்படி வரிசையாக நாம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, மற்ற பெண்களைப் போல இந்த அன்னாளும் ஒரு சாதாரண பெண்மணி தான். சில பெண்களுடைய வாழ்விலே வரக்கூடிய குறைவு இவளுடைய வாழ்விலும் வந்தது. அப்படிப்பட்ட நிலை வந்தபோது, குறையான, மனச்சோர்வான, மற்றவர்களால் அவமானமாக்கப்பட்ட நிலை ஏற்பட்டு கூனி குறுகிப்போன பொழுது, இந்த விசுவாச பெண்மணி எப்படி இதை சந்தித்தாள் என்பதை தான் தியானம் செய்யப் போகிறோம்.

இந்த அன்னாள் அருமையான சிறந்த தாயாக இருந்தாள். ஆவிக்குரிய நம்பிக்கையை இவள் செயல் விளக்கப்படுத்துகின்றவளாக இருந்தாள். ஆனபடியினாலே தான், நாம் அன்னாளை தேர்வு செய்துள்ளோம். 1 சாமுவேல் 1:16,17 ''உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும். மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம்பண்ணினேன் என்றாள். அதற்கு ஏலி சமாதானத்துடனே போ. நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட

உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக என்றான்''. இங்கே நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், அன்னாள் ஜெபம் செய்கின்றாள்; எப்பொழுது ஜெபம் செய்கின்றாள்? எப்பொழுதும் போல தன் கணவன் எல்க்கானாவோடும், அவனுடைய மூத்த தாரம் மற்றும் அவளுடைய பிள்ளைகளோடு தேவாலயத்திற்கு பலி செலுத்த வருகின்றாள். பலி செலுத்திய பிற்பாடு விருந்து அங்கு ஆயத்தமாகிறது; அவளுடைய நாச்சி அவளை மனவடிவடையும் படியாக பேசி வேதனைப்படுத்துகிறாள். அப்பொழுது அவள் அங்கே அமர்ந்து பலி விருந்தை உண்ணுவதற்கு பதிலாக, ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஓடிப் போகிறாள்.

இது நமக்கு எதனை அடையாளம் காட்டுகிறது? சகோதரிமார்களே! பெண்களை மற்ற பெண்களோ, மற்றவர்களோ கேவலப்படுத்தும் போது, பதிற்க்கு பாதுகாக்கிறேன் பேர் வழி என்று எதிர்த்துப் பேசுவதினாலே; கணவன் மனைவி உறவானாலும் சரி, பெற்றார் பிள்ளைகள் உறவானாலும் சரி அது பிரச்சனைகளாகவே வளர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால், இங்கு நாம் அன்னாளிடம் கற்றுக் கொள்ளக் கூடியது என்னவென்றால், அவள் விரைவாக, வேகமாக ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஓடி வருகிறாள். பெண்கள், அன்னாளை ஒரு நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ள வேண்டும். அவளை கேவலப்படுத்தியவர்களை அவள் பதிலுக்குப்பதில் எதிர்த்து பேசவில்லை. இன்றைய உலகத்திலே உடனுக்குடன் எதிர்த்துப் பேசுகின்ற ஒரு சுபாவம், குணம் பெண்களிடம் ஏற்பட்டுள்ளது. இப்படி செய்தால் தான் என் நிலையை அவர்கள் புரிந்து கொள்வார்கள். ‘குட்ட குட்ட குனிந்து கொண்டேயிருந்தால், குட்டிக் கொண்டேயிருப்பார்கள்; நிமிர்ந்து நின்றால் தான் சரியாகும்’ என்ற ஒரு மனப்பான்மை இருக்கிறது. ஆனபடியினாலே, கிறிஸ்தவர்கள் அல்லது தெய்வீக குணம் நிறைந்த வாலிப பெண் பிள்ளைகள், ஒரு கிறிஸ்தவ தாயோ, ஒரு கிறிஸ்தவ மனைவியோ தாங்கள் குற்றம் சாட்டப்படும் பொழுது, எதிர்ப்பேசாமல் எதற்காக அவர்கள் அவமானப்படுத்தப்படுகிறார்களோ, அந்த வேதனையை தேவனிடத்தில் சொல்லி விட வேண்டும். இந்த அன்னாள் வருத்தம் வந்த போது மனிதர்களிடம் எதிர்த்துப் போராடாமல், தேவனிடத்திற்கு அவள் போனாள்.

மேலும், 1 சாமுவேல் 1:9-18 வசனங்களில், அங்கே அவள் போய் மனம் உருகி, மனம் கசந்து அழுகிறாள். யாரிடத்திலே அவள் அழுகிறாள்? மனிதர்களிடத்திலே அல்ல, தேவனிடத்திலே அவள் அழுகிறாள் என்பதை நாம் அங்கே அறிந்து கொண்டவர்களாயிருக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையை நாம் படிக்கும்போது அன்னாள் ஒரு சிறந்த

முன்மாதிரியாயிருக்கிறாள். தன் வாழ்க்கையில் எதை நம்பினாளோ, அதை செயல் விளக்கப்படுத்துகிறாள். எனக்கு ஆறுதல் தேவன் தான் என்று சொல்லும் பழக்கம் அனேகருக்கு உண்டு. தேவைபடும் ஆனால் ஆறுதல் வரும்போது நாம் தேவனிடத்திற்கு போவதற்கு பதிலாக வேறு எங்கோ போகிறோம். இந்த அன்னாளோ ஆறுதல் தேவைப்பட்ட சமயத்தில் தேவனிடத்திற்கு அவள் ஓடினாள். உலகத்தாரின் பேச்சு நம் பெலத்தை குறுகிப் போகப்பண்ணுகிறது. குறிப்பாக பெண்கள் சீக்கிரத்தில் பலவீனப்பட்டு, மனச்சோர்வடைந்து போகக் கூடியவர்களாய் இருக்கின்றார்கள். ஆகையினால், சீக்கிரமாக பெலத்தைப் பெற “ஜெபம் என்பது ஒரு மாபெரும் மூலக் கூறாயிருக்கிறது'' என்பதை அன்னாள் மீண்டும் நமக்கு அடையாளப்படுத்துகிறாள். அதிகதிகமாக பிரச்சனை வர வர அதிகதிகமாக தேவனிடத்தில் நெருங்கிச் சேருகின்றாள்.

அவளுடைய கணவனுடைய மூத்த மனைவி அவளை அனேக நாட்களாய் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தபடியால், அவள் அதிக நேரம் தேவனிடத்தில் முழங்காலில் நின்று மன்றாடிக் கொண்டிருந்தாள். குடித்து, வெறித்தவள் போலிருக்கிறாயே என்று தேவாலயத்தில் ஏலி அவளை சொல்கிறார். அப்படியென்றால், எவ்வளவு அதிகமாய் அவள் தேவனிடத்தில் ஜெபித்திருக்கிறாள் என்று தெரிகிறது. தோல்வி அதிகரிக்க அதிகரிக்க தேவனுடைய சமூகத்தில் மிகவும் அதிக அதிகமாய் இருப்பது எவ்வளவு அவசியம் என்று அன்னாள் இங்கு சகோதரிகளுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

வேதாகமமே மனிதனுடைய
முழுமையான வழிகாட்டியாகையால்,
சரியான சுவிஷேசத்திற்காக நாம்
வேதாகமத்திற்கே திரும்ப வேண்டும்.

1சாமுவேல் 1:16 “உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும். மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள்.” அவளால் பாரம் சுமக்க முடியாத போது, அதை தேவனிடத்தில் இறக்கி வைத்து விட்டாள். வேதாகமம் சொல்கிறது; “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தல் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்''. ‘‘அவர் உங்களை விசாரிக்கிறவரான படியினால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்''. அன்னாள் அதனை சரியாக செய்தாள். இதனுடைய விளைவு தேவனுடைய மனுஷன் சொல்லுகின்றான், “சமாதானத்தோடே போ. உன் ஜெபம் கேட்கப்பட்டது'' என்று. இது ஒரு அருமையான முன்மாதிரியாயிருக்கிறது.

அன்னாளைப் பற்றி தொடர்ந்து பார்க்கும்போது நாம் கற்றுக் கொள்ளக் கூடிய காரியம் என்னவென்றால், ஒரு நன்றி பாடலை அவள் பாடுகின்றாள். அந்த நன்றி பாடலிலே நாம் என்ன தெரிந்து கொள்ள முடியுமென்றால், தேவன் பரிசுத்தமானவர் என்றும்; அவருடைய பெலத்தின் வல்லமையைப் பற்றியும்; தேவன் ஞானமிக்கவர் என்பதையும்; அவர் மேன்மையான நியாயாதிபதி என்பதையும்; எந்த அளவுக்கு இவள் குறை உள்ளவள்; எந்த அளவுக்கு இவளுடைய நம்பிக்கை தேவன் மீது இருந்தது; தேவன் மீது நம்பிக்கை வைக்குமளவுக்கு இவள் தேவனைப் பற்றி எவ்வளவு தெரிந்து வைத்திருந்தாள் என்பதையெல்லாம் இவள் நன்றி பாடலிலே வெளிப்படுத்துகின்றாள். அடுத்தவர்கள் நம்மை குத்தும் போது, நாம் எதினால் பாதிக்கப்பட்டோம் என்பதை யோசிக்காமல், அவர்களால் நாம் அடைந்த வேதனைக்கு விடுதலை தரக்கூடிய தேவனின் வல்லமையின் மீது நம்முடைய நம்பிக்கையை நாம் வைக்கும் பொழுது, அது மாபெரும் பெலமாயிருக்கும் என்பதை இது நமக்கு அடையாளப்படுத்துகிறது.

இந்த பெண்மணியினிடத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அடுத்த குணம் என்னவென்றால், சோதனைகளில் அவள் பொறுமையுள்ள பெண்மணியாய் இருந்திருக்கிறாள். 1 சாமு 1:6,7 “கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள். அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவன் வருஷந்தோறும் அந்தப்பிரகாரமாய்ச் செய்வான். இவள் அவளை மனமடிவாக்குவாள். அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள்.'' என்று வாசிக்கிறோம் சில சகோதரிகள் சில வேளைகளில் இப்படிச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ‘என் கணவனால் எத்தனையோ வருடம் வேதனைப்பட்டிருக்கிறேன், என் மாமியாரால் வேதனைப்பட்டிருக்கிறேன், என் மருமகளால் வேதனைப்பட்டிருக்கிறேன் இத்தனை வருடம் பொறுமையாக இருந்தேன். ஆனால், இன்று நல்லா பேசிவிட்டேன்’ என்று. தெய்வ நம்பிக்கையுள்ள சகோதரிகளே! வேதவசனம் சொல்லுகிறது, இங்கே ஒரு பெண்மணி நமக்கு அடையாளம் காட்டுகின்றாள். அவள் தன் கணவனுடைய மூத்த தாரத்தினால் எப்பொழுதும் மனமடிய செய்யப்பட்டவளாக இருந்தாள். ஆனாலும், அவளோ தேவனுடைய சமூகத்திற்கு ஓடி ஜெபிக்கக்கூடியவளாக இருக்கிறாள்.

வருடங்கள் அதிகமானாலும், பிரச்சனை அதிகமானாலும் பொறுமையை காத்துக்கொள்வது பெண் கையில் தான் இருக்கிறது. இதை அன்னாள் இங்கு அடையாளப்

படுத்துகிறாள். சங்கீதம் 142:4ல் ‘‘எனக்கு அடைக்கலமில்லாமல் போயிற்று’’ என்று அங்கே சொல்லப்படுகிறது. எவ்வளவு நொறுங்கிப் போயிருந்தால், இந்த வார்த்தை வெளியே வந்திருக்கும். கொடுமையான விமர்சனங்கள், வேதனையான துன்புறுத்தல்கள், அர்த்தமற்றதான வேதனைகளையெல்லாம் பொறுத்துக்கொள்கிற பொறுமையின் சிகரமாக அன்னாள் இருந்தபடியினாலே, வேதாகமத்தையும் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளையும் நேசிக்கிற ஒவ்வொரு சகோதரியும் பொறுமையை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்று அன்னாள் சொல்லிக் கொடுக்கின்றாள்.

அன்னாளிடம் கற்றுக் கொள்ள வேண்டிய அடுத்த ஒரு பண்பு என்னவென்றால், அவள் கேட்டால், அவள் கேட்டபடியே தேவன் கொடுத்தார். தேவன் கொடுத்த அந்த பிள்ளையை அவள் சொன்னபடியே ஆசரிப்புக் கூடாரத்தில் போய் விட்டு விட்டாள். இதனுடைய அர்த்தம் என்ன? ஒன்றே ஒன்று என்று அதிக நாள் காத்திருந்து பெற்றுக் கொண்ட பிள்ளையை அப்படியே தேவனிடம் கொடுத்து விட்டாள். எத்தனை சகோதரிகள் தங்கள் கணவன்மார் ஊழியம் செய்யும் போது அவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். மாறாக, ‘மற்ற ஆண்களைப் போல நீங்களும் சம்பாதியுங்கள்’. நம் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி யோசியுங்கள்’ என்று சொல்லக் கூடிய மனநிலை உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால், அன்னாள் தன்னிடமுள்ள ஒரே பிள்ளையையும் தேவனுக்கென்று கொடுத்துவிட்டாள். அந்த பிள்ளையை தேவனுக்கேற்ற விதத்தில் வளர்க்கப்பட காரணமாக இருந்தாள். அதன் விளைவு, அவன் தேவ ஜனங்களை ஆளும் ராஜாக்களை அபிஷேகம் செய்யக்கூடிய தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்ற மாபெரும் தீர்க்கதரிசியாக மாறினான். ஆகையால், பெண்களாகிய நீங்கள் அனைவரும் இந்த அன்னாளின் மனநிலையை போல் உங்கள் மனதை மாற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது, தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்கும் உங்கள் தலைமுறைக்கும், இன்றும் என்றும் தங்கும். தேவன் தாமே இந்த முயற்சியில் உங்களுக்கு பெலத்தையும் கிருபையும் தந்தருளுவாராக. ஆமென்.

அடுத்தவர்கள் நம்மை குத்தும் போது, நாம் எதினால் பாதிக்கப்பட்டோம் என்பதை யோசிக்காமல், அவர்களால் நாம் அடைந்த வேதனைக்கு விடுதலை தரக்கூடிய, தேவனின் வல்லமையின் மீது நம்முடைய நம்பிக்கையை நாம் வெளிப்படுத்தும் பொழுது, அது மாபெரும் பெலமாயிருக்கும்!

# வேதாகமத்திற்கு திரும்புவோம்

## BACK TO THE BIBLE

J.C. Choate

தேவனுடைய வார்த்தையை, மனிதனுடைய கற்பனைகளும், உபதேசங்களும் புறம்தள்ளி அதற்கு மாற்றாக அமர்ந்திருப்பதினால், இன்றைய கிறிஸ்தவ மார்க்கம் எங்கே இருக்கிறது என்று பாருங்கள். பரலோகத்தின் தேவனுக்கு முன்பாக, ஒரு மனிதனை விழுந்து ஒரு தனிமனிதன் வணங்கும் நிலை பரிதாபமான ஒன்றே. இதனால் எல்லாரும் ஒரே சத்தமாக, "தேவனே, எங்களை மன்னியும், நாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறோம்" என்று கதறும் நிலையே உள்ளது.

''கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்", என்பதை அறிய மனிதன், முழுவதுமாக வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும். 2 தீமோ 3:16,17ல் ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக; அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று பவுல் கூறுகையில், ஏன் வேதத்திற்கு திரும்ப வேண்டும் என கூறுகிறார். எல்லா நல்ல செயல்களையும் செய்ய வேத வசனங்கள் மனிதனை வழிநடத்துமானால், ஏதோ புதுமையான ஒன்றிற்காக அதை ஏன் விட்டுவிட வேண்டும்? பதில் என்னவாயிருக்குமெனில், அப்படிப்பட்ட ஆத்துமா தனக்கு இருக்க வேண்டிய சத்தியத்தின் மீதான அன்பை கொண்டிருக்கவில்லை.

ஆவிக்குரிய விஷயங்கள் அனைத்திற்கும், வேதாகமத்தை (பைபிள்) மட்டுமே முழு ஆதார புத்தகமாக கிறிஸ்துவின் சபை அறிந்துள்ளது. அதின் விளைவாக இந்த சபையானது, வேதாகமம் பேசும் இடத்தில் பேசவும், வேதாகமம் அமைதி

சுவிசேஷத்திற்கு நம்பி கீழ்படிய ஒருவர், தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பிற்கு என்று ஞானஸ்நானம் பெற வேண்டும், (மாற்கு 16:16; அப் 2:38).

காக்கும் இடத்தில் அமைதி காக்கவும்; வேதாகம காரியங்களை வேதாகம மாதிரியின்படியே செய்யவும் முயற்சித்து வருகின்றது. இந்த அடிப்படையில் நாங்கள், எங்களை சுற்றியுள்ள மதத்தினரிடம், கிறிஸ்துவின் நாமத்தினாலே சொல்லவும் செய்யவும் வேண்டிய எல்லாவற்றிற்கும் வேதாகமத்திற்கே திரும்பும்படி வேண்டுகிறோம். ஒருவர் வேதாகமத்தை சார்ந்து எவ்வளவு காலம் இருக்கிறாரோ அப்பொழுது அவர் தவற முடியாது; ஆனால், அவர் அதைவிட்டு பிரிந்து போகையில் பிரச்சனைகள் தோன்ற ஆரம்பிக்கும்.

நாம் சொல்லுகின்ற அளவு வேதாகமத்தை நம்புவோமாகில், பின்பு, நாம் 'சபையைப் பற்றிய சத்தியத்திற்கு வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும். கிறிஸ்து சொல்கிறார், ''இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத் 16:18) என்று அவர் தன்னுடைய சபையைக் கட்டுவதாக வாக்களித்தார்; மேலும் தன் வாக்குறுதியை அப் 2ன் படி நிறைவேற்றினார். இப்பொழுதும், நாம் அந்த சபையினுடைய அங்கமாக இருக்கிறோமா?

வேதாகமமே மனிதனுடைய முழுமையான வழிகாட்டியாகையால், சரியான சுவிஷேசத்திற்காக நாம் வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும். அநேக திரிக்கப்பட்ட (மாற்றப்பட்ட) சுவிசேஷசங்கள் பிரசங்கிக்கப்படுவது உங்களுக்குத் தெரியும்; ஆனால் வசனத்திற்கு கவனம் செலுத்தினால், நம்மை இரட்சிக்கும் சுவிஷேசம் ஒன்றே ஒன்றுதான்; அது இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசம். அதைப் பற்றி பவுல் கூறுகையில், ''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்பட்டேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலானாயிருக்கிறது", (ரோ 1:16) என்கிறார். இந்த சுவிசேஷத்திற்கு நம்பி கீழ்படிய ஒருவர், தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பிற்கு என்று ஞானஸ்நானம் பெற வேண்டும், (மாற்கு 16:16; அப் 2:38). இந்த சுவிசேஷத்திற்கு நீங்கள் கீழ்படிந்துள்ளீர்களா?

வேதகாமம் தேவனுடைய புத்தகமாக இருப்பதினால் உண்மையான ஆராதனை செய்ய நாம் வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும். ஒருவர், நேர்மையாகவும் முழு ஈடுபாட்டோடும் செய்யும் வரை தனக்கு விருப்பமான வழியில் ஆராதிக்கலாம்

என்ற போதனையை நாம் அடிக்கடி கேள்விப்பட்டுள்ளோம்; ஆனால், இந்த கூற்றிற்கு வேதாகமத்தை பொருத்தமட்டில் ஆதாரம் இல்லை. கிறிஸ்து நமக்கு கூறுகையில் "தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்'', (யோ4:24) என்கிறார். உண்மையான ஆராதனை கோருவது என்னவெனில், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஜெபிக்க, வசனம் படிக்க, பாட, கர்த்தரின் பந்தியில் பங்குபெற மற்றும் கொடுக்க ஒன்றுகூட வேண்டும் என்று கூறுகிறது, (லூக் 18:1;2தீமோ:15; கொலே 3:16; அப் 20:7; 1கொரி 16:2). சத்தியத்தின் வெளிச்சத்தில் (முன்) நாம் தேவனை ஏற்றுக்கொள்ளும் முறையில் ஆராதித்து கொண்டு வருகிறோமா?

நாம் தேவனுக்கு கீழ்படியப் போகிறோமெனில், கிறிஸ்தவ வாழ்வைப் பற்றிய சத்தியத்திற்கு நாம் வேதாமத்திற்கு திரும்ப வேண்டும் ஒருவர் ஒரு முறை இரட்சிக்கப்பட்டு விட்டால் அந்த இரட்சிப்பை இழந்து போகவே முடியாது என்று கடவுளால் அருளப்பட்ட வசனம் எங்குமே சொல்வதில்லை மாறாக நாம் கிறிஸ்தவர்களானால் ஆண்டவருக்கு உண்மையாக இறுதிவரை நிலைத்திருக்கும்போது நித்தியமாக இரட்சிக்கப்டுவோம். "நீ மரணபிரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்று வெளி 2:10 ல் வாசிக்கிறோம். ஒரு உண்மையான கிறிஸ்தவனாயிருக்க ஒருவர் தான் செய்யும் எல்லாவற்றிலும் ஆண்டவரை முதன்மையானவராக வைத்து தன் வாழ்வின் ஒவ்வொரு நாளும் அவரை பின்பற்ற வேண்டும். இந்த அடிப்படையில் நாம் நம்மை புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் என்று கூற முடியுமா?

ஆம்! இங்கே குறிப்பிட்ட காரியங்களில் நாம் வேதாகமத்திற்கே திரும்ப வேண்டும் இவை மட்டுமல்ல நாம் நேர்மையாக தேவ வார்த்தையை விசுவாசித்தால் பெயருக்காகவும் (1பேதுரு 4:16), அஸ்திபாரத்திற்காகவும் (1கொரி 3:11), சபையின் தலைவருக்காகவும் (எபே 5:23), இரட்சிக்கின்ற விசுவாசத்திற்காகவும் (எபே 4:5) உண்மையான ஞானஸ்நானத்திற்காகவும் (கொலே 2:12) வழியிற்காகவும் (யோ4:16), ஆம் சத்தியம் மற்றும் நீதிக்குரிய அனைத்திற்காகவும் நாம் வேதாகமத்திற்கே திரும்புவோம்(யோ 8:32;தீத்து2:11,12)

– (தமிழில்) **கிங்ஸ்லி ராஜா**

# நித்தியமான பலியான இயேசு கிறிஸ்து

Jesus Christ, The Eternal Sacrifice

Betty Choate

## ஆண்டவர் யார்?

தொடர்ச்சி...

முகமது சொல்கின்ற இஸ்லாமியத்தைப் பற்றியோ, இந்து மதத்தைப் பற்றியோ எனக்கு நிறைய விஷயங்கள் தெரியாது. நாங்கள் நல்ல நண்பர்களாக பழகியதினால், சில நாட்கள் இரவுகளில் ஒருவர் மற்றவர்கள் வீட்டில் தங்கியதுண்டு. அப்படிபட்ட நேரங்களில் நிறைய விஷயங்களை பேசுவதுண்டு.

முகமதுவிற்கு முஸ்லிம்களைப் பற்றியும், அவர்களது பரிசுத்த புத்தகமாகிய குரானைப் பற்றியும், நிறைய தெரியும்."அல்லாவே கடவுள்" என்றும், "முகமது என்பவர் அவருடைய கடைசி மற்றும் சிறந்த தீர்க்கதரிசி" என்றும்'' கூறினான். ''எங்கள் தகப்பனாகிய ஆபிரகாம் வாழ்ந்தார், பின்பு உங்கள் இயேசு, இப்பொழுது அல்லாவின் தீர்க்கதரிசி முகமது" என்று கூறினான்.

''அப்படியானால், பைபிளில் சொல்லப்பட்ட அதே கடவுளை தான் நீ நம்புகிறாயே?" என்று நான் கேட்டேன்.

''ஆம், அல்லாதான் கடவுள்-ஆபிரகாமின் கடவுளாகிய அவரே தான். ஆனால் அரபியராகிய நாங்கள் இஸ்மவேலிடமிருந்து வந்தவர்கள்; மேலும் முகமது எங்களுக்கு புதிய சட்டங்களைக் கொடுத்தார்; அது உங்கள் இயேசு கொடுத்தது போன்றவை அல்ல'' என்றான் " "ஆனால், நீங்களும் இயேசுவை நம்புபவர்கள் தானே?" என்று கேட்டேன்.

"நிச்சயமாக! அவர் ஒரு பரிசுத்த தீர்க்கதரிசி. ஆனால், நீங்கள் சொல்லுகிறபடி அவர், 'தேவனுடைய குமாரன்' இல்லை தேவன் மனிதன் அல்ல. அவர் திருமணம் செய்யவில்லை. அவருக்கு ஒருபோதும் மனைவி இருந்ததில்லையே! அப்படியிருக்கையில் எங்கிருந்து அவருக்கு மகன் இருப்பான்? அப்படி சொல்வோமானால் இரண்டு கடவுள் என்கிறதாயிருக்குமே. எங்களுடைய மௌலவி அது தெய்வநிந்தனை என்கிறார்", என்றான்.

'நீ இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நம்பாமல், ஆபிரகாம் மற்றும் இயேசுவைப் பற்றி பைபிள் கூறும் ஒரு பகுதியை மட்டும் எவ்வாறு நம்புகிறாய்? பைபிளில் நாம் வாசிக்கும்போது, கடவுளுடைய வார்த்தை வானத்திலிருந்து உண்டாகி, அவர் கூறியது 'இவர் என்னுடைய நேச குமாரன்....' (மத் 3:14)'' என்று கூறினேன்.

''பைபிளின் அந்தப் பகுதி மாற்றப்பட்டுள்ளது" என முகமது எனக்கு உறுதியாய் கூறினான்.

ராம், முழுவதுமாக இயேசுவை புறக்கணிக்கவில்லை என்பது எனக்கு ஆச்சர்யம் தந்தது. ஒருவேளை, இயேசு வாழ்ந்தது இவ்வுலகில் தாக்கத்தை ஏற்படுத்தியதும், காலங்கள் அவருடைய பிறப்பினை கணக்கிட்டே குறிப்பிடப்படுவதும், நாகரீகமான நாடுகளின் சட்டங்களில் அவருடைய போதனைகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதும்; இவைகளினாலேயே எல்லா மதங்களும் அவரை (இயேசுவை) தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொண்டுள்ளன.

நாங்கள் ராமினுடைய வீட்டில் இருந்தபோது, அவன் எங்களுக்கு ஒரு சிறிய அறையை காண்பித்தான். அதில் யானை தலையுடன் ஒரு கடவுளின் சிலை இருந்தது. இது தான் "கணேஷ்" (பிள்ளையார்) என்று ராம் விளக்கினான். "இவர் தான் செழிப்பிற்கான கடவுள். நாங்கள் செய்யும் வியாபாரம் அல்லது ஏதோ புதிய காரியத்தில் வெற்றி பெற இவரிடம் தான் வேண்டிக் கொள்வோம்" என்றான்.

''இவருடைய கதை என்னவென்றால், இவருடைய தகப்பனான அழிக்கும் கடவுளாகிய சிவன், இவரை புதிதாக பிறந்தவுடன் பார்த்தபோது, சந்தோஷத்தினால், அழிக்கும் தன்மைக் கொண்ட தன்னுடைய மூன்றாவது கண் திறந்திருப்பதை மறந்துவிட்டார்; அதனால், அவர் குழந்தையை பார்த்தவுடன் அதின் தலை அழிந்துவிட்டது. பின்பு அவர் தன்னுடைய வேலைக்காரனை அனுப்பி, முதலில் கண்ணில் படும் உயிரினத்தின் தலையை கொண்டுவரும்படி கூறினார்; அப்பொழுது அவர் பார்த்த முதல் உயிரினம் யானை! இப்படித்தான் கணேஷ் (பிள்ளையார்) தன் தலையை பெற்றுக்கொண்டார்'' என்று ராம் கூறினான்.

**பொது அறிவு ஆராய்ச்சி நமக்கு, வாழ்வின் வடிவத்தைப் பற்றி பல காரியங்களை போதிக்கின்றன:**

1. உயிரின் "வகைகள்" தங்கள் தனிப்பட்ட எல்லையை கடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை; மரத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான "காணாமல்போன இணைப்பு" (Missing Link) எங்கே?

2. இன்றைய உலகில் பலதரப்பட்ட விலங்குகள் மொத்தமாக இல்லாமலே (Extinct) போவது ஒரு வினோதம் கிடையாது. இன்றிலிருந்து ஆயிரம் வருடங்கள் கழித்து, யானை என்ற ஒரு விலங்கு இருந்ததைப் பற்றி பிள்ளைகள் ஆச்சர்யப்படுவர் – அவைகளின் நாட்கள் எண்ணப்படுகின்றன.

3. ஆகையால், அநேக வகையான உயிரினங்கள் ஒரு காலத்தில் இருந்து, இப்பொழுது இல்லாமல் இருப்பது புரியாத புதிர் அல்ல. மாற்றங்கள் மாற்றத்தை கொண்டு வரும், வாழ்வு கடந்து போகும்.

“அப்படியானால், இந்து மதத்தில் எத்தனை கடவுள்கள் உள்ளன?” என குழப்பத்துடன் நான் கேட்டேன். ‘‘யாருக்கு தெரியும்?’’ என ராம் சிரித்தபடியே கூறினான். பின்பு அவன் நிதானமாக, “இந்தக் கேள்வியை நான் என் அம்மாவிடம் கேட்டபோது, ஒரே ஒரு கடவுள் தான் இருப்பதாக அவர் கூறினார்–அதாவது, கடவுள் இல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்றும், கடவுளுடைய பிரசன்னம் எல்லாவற்றிலும் இருப்பதினாலேயே, அவைகள் இருக்கின்றன என்றும் கூறினார்” என்றான் ராம்.

‘அதாவது, கடவுள் மிருகங்கள் மற்றும் சிலவற்றின் வடிவங்களை எடுத்துக்கொள்கிறார் என்கிறாயா?’’ என்றேன்.

“ஆம் கடவுள் எல்லாவற்றிலும் இருக்கையில், அவை அனைத்தும் நிஜமாகின்றன. நாம் எதை அனுபவிக்கிறோம் என நினைக்கிறோமோ, அது கடவுளுடைய மனதில் ஒரு கனவாகவோ, நாடகமாகவோ இருக்கிறது. மேலும் கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லையானதால், மேலும் அவர் எல்லாவற்றையும் தன்னுடைய கனவினாலேயே நடப்பித்துக் கொண்டிருப்பதால், நாம் எதை வேண்டுமானாலும் கடவுள் என நினைத்து வணங்கலாம்” என்றும் ராம் கூறினான்.

– (தமிழில்) **கிங்ஸ்லி ராஜா**

–தொடரும்

---

**“மனிதனுடைய பரிணாமச் சங்கிலி” இவ்வாறு கூறுகிறது:**

| படிவத்தின் பெயர் (Fossil Name) | விஞ்ஞானிகளினால் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| ஜைஜான்டோபிடகஸ் (Gigantopithecus) | 1977 |
| ராமாபிடகஸ் (Ramapithecus) | 1981 |
| ஆஸ்ட்ரேலோபிடகஸ் (Australopithecus) | ரிச்சர்ட் லீகீயினால் தள்ளுபடி செய்யப்பட்டது. |
| ஹோமா ஹாபிலிஸ் (Homo Habilis) | 1995 |
| ஜாவா மனிதன் (Java Man) | ஹோமோ எரக்டஸ் – நவீன மனிதன் |
| பீகிங் மனிதன் (Peking Man) | ஹோமோ எரக்டஸ் – நவீன மனிதன் |
| நியன்டெர்தல் மனிதன் (Neanderthal Man) | நவீன மனிதன் |
| க்ரோ–மேக்னன் மனிதன் (Cro-Magnon Man) | நவீன மனிதன் |
| பில்ட்டவுன் மனிதன் (Piltdown Man) | 1953 ல் ஏமாற்று என அறிவிக்கப்பட்டது. |
| நெப்ராஸ்கா மனிதன் (Nebraska Man) | ஒரு பன்றியின் பல் |

இவைகளின் முடிவு என்னவெனில், ‘நிரூபிக்கப்பட்ட பரிணாம சங்கிலி’ என்று ஒன்று இல்லவே இல்லை.

விபரங்கட்கு : பார்க்கவும் ‘போன்ஸ் ஆஃப் கன்டன்ஷன்’ எழுதியவர் : மார்வின் L. லூபினோவ்; மற்றும் ‘தி ட்ரூத் அபவுட் ஹுமன் ஆரிஜின்ஸ்’ (மனித தோற்றத்தைப் பற்றிய உண்மைகள்) எழுதியவர்கள் : ப்ரராட் ஹாரூப் Ph.D., மற்றும் பெர்ட் தாம்சன் Ph.D.,

# வேதாகமத்தில் சாபங்கள்
## (CURSES IN THE BIBLE)

சில நேரங்களில் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும் என்பதை விட நான் ஏன் தோற்றுப்போனேன், ஜெயிக்கவில்லை என்ற பாடங்கள் அதிக பயனை தரக்கூடியதாக இருக்கும். ஒரு மாணவன் பாஸ் பண்ண என்ன செய்யனும் என்று கேட்டால், அவனுக்கு ஆசிரியர் தரும் பதிலிற்கும், நான் ஏன் தோற்றுப்போனேன் என்று கேட்டால் அதற்கு தரும் பதிலிற்கும் வித்தியாசம் இருக்கும். பாஸ் பண்ண என்ன செய்ய? பிராக்டிகல் பரிட்சையில் 50 மார்க்கு வரும் அல்லது 20 மார்க் வரும் மீதம் உள்ள மதிப்பெண்களுக்கு முக்கியமான சில காரியங்களை மட்டும் படிக்க சொல்வார்கள். நான் ஏன் பெயிலானேன்? 'நீ பாடங்கள் நடத்தும் போது சரியாக கவனிக்கவில்லை; இனி நல்ல கவனி! வகுப்பில் படிப்பதை வீட்டில் போய் மறுபடியும் படிக்கவில்லை; இனி படி! உன் கையெழுத்து இன்னும் தெளிவாகனும்; தூக்கத்திற்கும், வீணான காரியங்களுக்கும் நேரத்தை செலவிடாமல், கிடைக்கும் நேரத்திலெல்லாம் படி'. அவன் எதனால் தோற்றுப்போனான், எங்கே கோட்டைவிட்டான் என்பது அவனுக்கு தெளிவாக சுட்டிக்காட்டப்படும் அல்லவா!

வேதகாமம் தேவனுடைய புத்தகமாக இருப்பதினால், உண்மையான ஆராதனை செய்ய, நாம் வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும்.

நாம் தேவனுடைய பிள்ளைகள், தேவனாலே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நம்முடைய தேவன் ஆசீர்வாதத்தின் தேவன். உலகத்தையும், மனிதனையும் படைத்த பின்பு அவர் செய்த முதல் வேலை எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். ஆதி 1:22,28 தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வாதித்தார்.

மேலும், அவர் ஆசீர்வாதத்தை கொடுக்கிற தகப்பனல்ல; கொட்டுகிற தகப்பன். கொடுத்தல் என்பது எண்ணிக்கை, கொட்டுதல் என்பது எண்ணிக்கையில் அடங்காதது. அதனால் தான் "தாவீது" என் பாத்திரம்

நிரம்பி வழிகிறது என்கிறான். ஏனெனில் கொடுத்தல் என்பது அளவு; பாத்திரம் நிரம்ப மட்டுமே செய்யும். கொட்டுதல் என்பது அளவற்றது; அதனால் தான் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்கிறான். ''வானத்தின் பலகணிகளை திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க (கொட்ட) மாட்டேனோ'' என்கிறார். இப்படிப்பட்ட தேவனுடைய ஜனங்களாகிய அநேகர் தங்கள் வாழ்விலே சாபத்தை பெற்றதை வேதாகமத்தில் நாம் காணக் கூடும். குறிப்பாக பழைய ஏற்பாடு சாபத்தை பற்றி அதிகம் பேசுகிறது. புதிய ஏற்பாடடில் மிக குறைவாகவே சாபத்தை பற்றிய வசனங்கள் வருகுறது. ஆனும் பழைய ஏற்பாடு இன்றைய நாளில் நமக்கு மிகப்பெரிய எச்சரிக்கை மற்றும் போதனையின் புத்தகமாக உள்ளது. (ரோ15:4: Iகொரி 10:11). மேலும் வேதாகமத்து தேவன் மாறதவர் (மல் 3:6). அன்று அவர் எதற்காக கோபம் கொண்டு சபீத்தாரோ, அந்த தன்மை (குணம்) இன்றும் என்றும் மாறாததாக இருக்கிறபடியினால் இந்த பாடத்தை நாம் தேவனுடைய எச்சரிப்பின் சத்தமாக படிப்போம்.

சாபம் என்பது ஒரு பயங்கரமான வார்த்தையாக தெரிவதினால் அதை பயன்படுத்த பயப்படுகிறோம். ஆனால், நம்முடைய வாழ்க்கை நீர்த்துப் போய் உள்ளது. வறண்ட பாலைவனம் போல வறட்சியாக, எங்கு திரும்பினாலும், எது செய்தாலும் அடி, அடிக்கு மேல் அடி; தொழிலில், குடும்பத்தில், சமுதாயத்தில் என எல்லா பக்கமும் நெருக்கடி. பணக் கஷ்டம், மனக்கஷ்டம், போராட்டம் நிறைந்த வாழ்க்கை, நிம்மதியற்ற நிலை, எதிலும் ஒரு பிடித்தம் இல்லை; தேவன் எங்களை சோதிக்கிறார்? என ஏதோ நியாயமற்ற காரணத்தினை கூறி தேவன் மீது பலியை போட்டு தப்பிக்கொள்ள முயற்சிக்கிறோம். அல்லது அதனை ஏதோ துன்பம் என்ற பார்வையில் பார்த்து புலம்புகிறோம். தேவனுக்கு பிரியமாக வாழ முயல்வதினால் நம்முடைய வாழ்வில் துனுபம் வரும் (lதீமோ 3:12, பிலி1:29) ஆனால் துன்பமே தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்வை முழுவதும் ஆக்கிரமித்து விடாது. (யோவா 16:20, மாற்10:29,30, 2 கொ 1:4-10)

வேதாகமம் ஆசீர்வாதங்களை மட்டும் உள்ளடக்கிய புத்தகம் அல்ல, அது சாபங்களையும் கொண்டுள்ளது. யோசுவா 8:34 “அதற்குப்பின்பு அவன் நியாப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமாகிய சகல வார்த்தைகளையும் வாசித்தான்''. மேலும் உபா 28 ம் அதிகாரத்தில் ஆசீர்வாதங்கள் முதல் 12 வசனங்களில் மட்டும் உள்ளது (28:1-12). பின் வரும் 56 வசனங்களிலும் சாபங்கள் உள்ளது (28:13-68). ஏறக்குறைய 5 மடங்கு

அதிகம். மேலே சொல்லப்பட்ட விரக்தியான நிலைகளை தான் வேதாகமம் சாபம் என்கிறது. அதனால் இந்த பாடத்தை நாம் மிகுந்த கவனத்துடனே படிப்போம்.

சர்வவல்ல தேவன், ஆசீர்வாதம் அல்லது சாபம், எது வேண்டுமோ அதனை நீங்களே தேர்வு செய்யுங்கள் என்கிறார் (உபா 11:26-28). கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்று வேதாகமம் சொல்கிறது. பிறகு ஏன் இந்த அவல நிலை? தேவனுடைய இருதயத்தின் ஆழங்களையும் ஆராய்ந்து அறிகிற பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளின வேதாகமம் நமக்கு இதற்கான பதிலை தருகிறது.

வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சாபங்களை நாம் மூன்றாக பிரித்துப் படிக்கலாம். மேலும், அதிலிருந்து விடுதலை பெற வழி என்ன என்றும் படிப்போம்.

1. தேவனிடத்திலிருந்து
(From God to Man)

2. மனிதனிடத்திலிருந்து
(From Man to God)

3. நம்மிடத்திலிருந்து ( நமக்கு நாமே )
(From Us to Our self )

4. சாபத்திலிருந்து விடுதலை பெற
(Freedom From Curse)

**I. தேவனிடத்திலிருந்து வரும் சாபங்கள்**

தேவன் சபிப்பாரா? என்னால் நம்ப முடியவில்லை! அவர் இரக்கங்களின் பிதா, ஆறுதலின் தேவன், ஆசீர்வாத்தின் ஊற்று. அவர் எப்படி சபிப்பார்? என நாம் நிகைக்கலாம் அல்லது சொல்லலாம். ஆனால் உண்மை என்னவெனில், ஆசீர்வாதங்களை போல சாபங்களும்

தேவனிடத்திலிருந்து வருகிறது. நீதி 3:33, “துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்'' என்று கூறுகிறது. கர்த்தரின் சாபம் என்று சொல்லப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆதிப்பெற்றோரை தேவன் ஆசீர்வதித்தார் (ஆதி 1:28); அதே தேவன் ஆதிப்பெற்றோரை சபித்தார் (ஆதி 3:16-19). தேவன் அவர்களை சபிக்கும்படியாக படைக்கவில்லை. மாறாக, அவர்கள் தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை பெற்ற கொஞ்ச நேரத்திலே சாபத்தையும் பெற்றுக்கொண்டார்கள். எந்த இடத்தில் (ஏதேனில்) அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்களோ, அந்த இடத்திலேயே சபிக்கவும்பட்டார்கள். தேவனுடைய சாபம் ஏன் வருகிறது?

### A. தேவனுடைய ஊழியத்தில் அலட்சியம்

1பேதுரு 2:9 “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான அசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்”, என்று கூறுகிறது. நாம் யாவரும் அவருடைய புண்ணியங்களை “அறிவிக்கும் படி” தெரிந்துக்கொள்ளப்பட்ட சந்ததி; இராஜரீகமான ஆசாரிய கூட்டம். ஆனால், அவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறோமா? ஆசாரிய ஊழியத்தை செய்கிறோமா? இந்த வசனம் ஊழியக்காரர்களை மட்டும் குறிக்கவில்லை, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொருவரையும் சொல்கிறது.

தேவனுடைய வேலையை செய்வது எப்படி ஆசீர்வாதமோ, அதேப்போல தேவனுடைய வேலையை செய்யாதிருப்பதும், அதனை அலட்சியமாக செய்வதும் சாபம். எரேமியா 48:10 ‘‘கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன்பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்”.

கேயாஸி - 2ராஜா 5:25-27 வசனங்களிலே படித்தால், சாபத்தை பெற்றான். எலியாவிற்கு பின் எலிசா வந்ததை போல, எலிசாவிற்கு பின் வரவேண்டிய தீர்க்கதரிசி இந்த கேயாஸி ஆனால், அவன் சம்பாதித்து என்ன சாபம். அவனுக்கு மட்டுமல்லாது அவனது சந்ததிக்கும் அதனை சம்பாதித்து வைத்தான். தேவனுடைய வேலையை விட்டுவிட்டு பணம் சம்பாதிக்க ஓடினான்? சம்பாதித்து என்ன? சாபம். என்ன ஒரு பயங்கரம்!

நாமும் வேகமாய் ஓடுகிற இந்த உலகத்தின் பின்னே அதிவேகமாய் ஓடி, அதனை முந்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். சில பேர் தேவனுடைய பணிக்காக தங்களது தொழிலை, வேலையை விட்டு வருகிறார்கள். ஆண்டவருடைய அப்போஸ்தலர்கள் செய்தது போல செயல்படுகிறார்கள்; அது நூறு மடங்கு ஆசீர்வாதம் (மாற்கு 10:28-30).

ஆனால், சிலர் வேலைக்காகவும், தொழிலிற்காகவும் தேவனுடைய பணியை விட்டு ஓடுகிறார்கள். நிறைய

> பரலோகத்தின் தேவனுக்கு முன்பாக,
>
> ஒரு மனிதனை விழுந்து ஒரு
>
> தனிமனிதன் வணங்கும் நிலை
>
> பரிதாபமான ஒன்றே.

பேர் பணம் சம்பாதிக்கத்தான் நேரமிருக்கு, தேவனுடைய வேலையை செய்ய நேரமில்லை என்கிறார்கள். தேவனுடைய வேலையை விட்டுவிட்டு பணம் சம்பாதிக்க ஓடுகிறவர்களே! ஒரு கணம் நில்லுங்கள். நீங்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு பணமும் கர்த்தருடைய சாபம் என்று வேதம் சொல்கிறது; கவனித்து கேளுங்கள். தேவனுடைய வேலையை அலட்சியமாக செய்தாலும் சரி, அதை செய்யாமல் ஒதுங்கினாலும் சரி, தேவனுடைய கோபத்திலிருந்தும் அதனால் பிறக்கும் சாபத்திலிருந்தும் அவர்கள் தப்பமுடியாது.

## B. விக்கிரக வழிபாடு

சிலை மற்றும் உருவ வணக்கம் பாவம். அந்த பாவம் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும் (உபா 29:18-20, 26-28) தேவன் தனக்கு சமமாக எதையும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இயேசுவை போன்ற படம் வைத்து வணங்குவதும் சாபம் தான் என்பதை நம்மில் எத்தனை பேர் ஒத்துக்கொள்ளப்போகிறோம். நாம் ஒத்துக்கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அது சாபம் என்று வேதாகமம் சொல்கிறது. (யாத் 20:2-5 உபா 29:26-28).

பொருளாசை என்பதும் விக்கிரக ஆராதனையாக இருக்கிறது (எபே 5:5 மற்றும் கொலே 3:5), ஞாயிறு ஆராதனையை விட்டுவிட்டு நாம் சம்பாதிக்கும் ஒவ்வொரு பணமும் சாபம். தேவனுடைய சந்நிதியில் நிற்க வேண்டிய பாதங்கள் வேறு எங்கு நின்றாலும் பாவம் அந்த பாவம் அன்று தேவனுடைய சாபத்தை வரவழைத்தது. இன்றும் அந்த வேதாகமத்து தேவன் மாறதவராயிருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்வோம்.

## C. தேவனை வஞ்சித்தல்

மல்கியா 3:8-9, ''மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கையிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்''. என்று வேதாகமம் கூறுகிறது. தேவனை ஏமாற்ற நினைத்த அனனியா சப்பிராளை நினைத்து பார்ப்போம் (அப் 5:1-11), என் சம்பாத்தியம். நான் உழைத்தது, என் உழைத்தது, என் கைப்பெலன் என்று சொல்ல வேண்டாம் (உபா 8:16-18). தேவனுக்கு மிச்சம், மீதியை போடாதீர்கள்! வேதபாரகதர் பரிசேயர் எல்லாம் தசமபாகம் செலுத்தினார்கள்; நாம் அவர்களைவிட ஒருபடி அதிகமாக கொடுக்க வேண்டியவர்கள் என்பதை நினைவில் கொள்வோம் (மத் 5:20).

தேவனுக்கு கொடுக்க முடியாத சூழ்நிலை என்று ஒன்றுமே இல்லை. ஏழை விதவை (லூக்கா 21), சாரிபாத் விதவை (1 ராஜா 17), மக்கதோனியா நாட்டு சபையார் (2 கொரி 8). ஆகியோரை நினைத்துப் பார்ப்போம்.

### D. கர்த்தருடைய பந்தியை அலட்சியம் செய்தல்

மல்கியா 2:2 “நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன். ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற் போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”. என்று வாசிக்கிறோம். ஆசீர்வாதம் சாபமாக மாறும். ஏன்? மல் 1:6,7,12 வாசித்து பாருங்கள்.


கர்த்தருடைய பரிசுத்த பந்தியை நான் இன்று எவ்வாறு பரிசுத்த குலைச்சலாக்குகிறேன். 1கொரி 11:24-28ன்படி ஆண்டவரை நினையாமல், அவருடைய மரணத்தை அறிவியாமல், தன்னை தானே சோதித்தறியாமல் பங்கு பெறும் போதும்; மேலும், 1 கொரி 10:20-21ன்படி கர்த்தருடைய பந்தியிலே வாய் வைத்துவிட்டு, கண்டதையும் சாப்பிடுவது, குடிப்பது, புகைப்பது என்று .ருகுகும்போதும் அப்படி செய்கிறேன். மேலும், 1கொரி 11:29-30 வாசித்து பாருங்கள்.


- தொடரும்

**- ஆண்டனி ராஜா**

> ஒருவர் வேதாகமத்தை சார்ந்து
> எவ்வளவு காலம் இருக்கிறாரோ,
> அப்பொழுது அவர் தவற முடியாது;
> ஆனால், அவர் அதைவிட்டு பிரிந்து
> போகையில் பிரச்சனைகள் தோன்ற
> ஆரம்பிக்கும்.


**கிருபையுள்ள வார்த்தை**
**புதிய வெளியீடுகள்**




ரூ. 100/- அனுப்பி இந்த இரண்டு
புத்தகங்களையும் பெற்று பயன் பெறுவீர்

- ஆசிரியர்

# "சோர்ந்துபோகாமல் ஜெபி" 1

**வசனப்பகுதி : லூக் 18 : 1 – 8**

**உவமை சுருக்கம்**:

ஆண்டவர் இயேசு சோர்ந்துபோகமல் ஜெபிக்க வேண்டும் என்பதை பற்றி ஒரு உவமையை சொன்னார். ஒரு ஊரிலே தேவனுக்கு பயப்படாமல், மனிதர் யாரையும் மதிக்காத ஒரு நியாயதிபதி இருந்ததான். அந்த ஊரிலே ஒரு ஏழைவிதவையும் இருந்தாள். அந்த ஏழைவிதவை அந்த நியாயதிபதியினிடத்தில் போய், 'ஐயா எனக்கும் என்னுடைய எதிராளிக்கும் இருக்கிற பிரச்சனையில் நீங்கள் தான் தலையிட்டு சரிசெய்யனும்' என கெஞ்சி கேட்டாள். இப்படியே தினமும் வந்து கேட்டுக்கொண்டே இருந்ததாள். அந்த நியாதிபதியோ வெகு நாட்காளாக அந்த விதவையின் வேண்டுகோளை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அதனை காதுகொடுத்து கேட்காதவன் போல இருந்தது, அந்த விதவையை அலட்சியம் செய்தான். ஆனால் அந்த விதவையோ கேட்பதை நிறுத்தவில்லை. அப்படி ஒரு நாள் மீண்டும் வந்து வேண்டினாள். அவள் போனபின்பு, அந்த நியயாயதிபதி தனக்கு தானே, 'நான் தேவனுக்கு பயப்படாதவன், மனுசரை மதிக்காதவனாக இருந்தும் இந்த விதவை ஓயாமல் வந்து என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறாளே, இனி இவள் வந்து என்னை தொந்தரவு செய்யாதபடி இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும்' என தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

டியர் குட்டிஸ் ! தேவனுக்கு பயப்படாமலும், மனுஷர்களை மதிக்காதவனுமாக இருந்த அந்த அநீதியுள்ள நீதிபதி அந்த விதவைக்கு உதவி செய்ய நினைத்தார் அல்லவா! இரக்கமும், அன்பும் நிறைந்த நம்முடைய தேவன், அவரை நோக்கி இரவும், பகலும் ஜெப்பிக்கிற நமக்கு உதவி செய்யாமல் போய்விடுவாரா? அல்லவே! நிச்சயம் உதவி செய்வார். அதனால் தொடர்ந்து (இடைவிடாமல்), சோர்ந்து போகமல் ஜெபம் செய்வோம்.


**மனன வசனம்** :

1தெச 5:17

**" இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்"**

பொருத்துக:

1. தேவனுக்கு பயப்பாடதவன் – இரக்கமுள்ளவர்
2. தேவன் – இயேசு
3. உவமை – தினமும் வேண்டியவள்
4. விதவை – நியாயதிபதி



# "தாழ்மையாய் ஜெபியுங்கள்" 2

**வசனபகுதி : லூக்க 18 : 9 – 17**

**உவமை சுருக்கம்** :–

தங்களை நீதிமான்களாகவும், மற்றவர்களை மிகவும் மட்டமாகவும் நினைத்த சிலரை குறித்து ஆண்டவர் இயேசு ஒரு உவமை சொன்னார். ஒரு ஊரிலே இருந்த ஜெப ஆலயத்தில், ஜெபம் செய்வதற்காக இரண்டு பேர் போனார்கள். ஒருவன் பரிசேயன், இன்னொருவன் ஆயக்காரன். இரண்டு பேருமே ஜெபம் செய்தார்கள். பரிசேயன் நின்றபடியே தேவனே! நான் அநியாயக்காரனாகவோ, விபச்சாரக்காரனாகவோ ! அல்லது இந்த ஆயக்காரனை போலவோ இல்லாதபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன், வாரத்திலே 2 நாள் உபவாசம் இருக்கிறேன், என்னுடைய வருமானத்தில் தசமபாகம் (10ல் 1 பங்கு) காணிக்கை கொடுக்கிறேன் என்று தன்னுடைய பெருமைபற்றி தேவனிடத்தில் ஜெபித்தான்.

ஆயக்காரனோ! தற்பெருமையில்லாதவனாக, ஜெப ஆலயத்திற்கு அருகில் செல்லகூட தன்னை தகுதியற்றவனாக நினைத்து கொஞ்ச தூரத்திலே நின்று, வானத்தினை நோக்கி தன் கண்களை ஏறெடுக்க பயந்து, குனிந்துக் கொண்டே தன் மார்பிலே அடித்துக்கொண்டு, 'தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாக இரும்' என்று தாழ்மையாக ஜெபம் செய்தான்.

பரிசேயன் உண்மையிலேயே நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும், அவனது பெருமையான ஜெபத்தினாலே நீதிமானக்கபடவில்லை; மாறாக, பாவியாக இருந்தாலும் தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தி ஜெபித்தபடியினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானக்கப்பட்டான், என்றார்.

டியர் குட்டிஸ் ! நாம் நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தாலும், தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தாலும், தேவனுக்கு முன்பாக நாம் நம்முடைய நீதி , வாழ்க்கை எல்லாம் குப்பை போல எண்ணவேண்டும். 'மற்றவர்களை மட்டமாக நினைக்ககூடாது; நான் நல்லவன், அவன் கெட்டவன். அதினால் நான் உயர்ந்தவன் என்ற பெருமை கூடாது. நாம் சிறியவர்கள்; உயர்ந்திருந்தாலும், அது தேவன் தந்தது தான். ஆகையால், எப்பொழுதும் தாழ்மையாக இருந்து தேவனுடைய கிருபையை பெறுவோம். ஆமென்!

**மனை வசனம்** :– **எபே 2:3**

ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யமால், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

**விளக்குக**

1. தசமபாகம் "..................."

2.பரிசேயன் "..................."

3.ஆயக்காரன் "..............."

4.தாழ்மை "..............."



# "ஆண்டவரை இழக்காதிருங்கள்" 3

**வசனபகுதி : லூக்கா 18 :18 – 30**


**சம்பவ சுருக்கம் :**

ஆண்டவர் இயேசு ஜனங்களுக்கு உபதேசம் செய்துக்கொண்டிருந்த போது, தலைவன் ஒருவன் வந்து, ஆண்டவரை நோக்கி, 'நல்ல போதகரே! நித்திய ஜீவனை பெற என்ன செய்யனும் என்று கேட்டான். ஆண்டவரோ, 'நியாய பிரமாணத்தில் உள்ள கற்பனைகளை அறிந்திருக்கிறாயே, அதின்படி செய் என்றார். அந்த தலைவனோ அதனை தான் சிறுவயது முதல் செய்துக்கொண்டு வருகிறேன் என்றான். ஆண்டவர் இயேசுவோ உன்னிடத்தில் இன்னும் ஒரு குறைவு உண்டு,உனக்கு உண்டானதை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும் .பின்பு என்னை பின்பற்றி வா என்றார். அந்த தலைவன் மிகவும் பெரிய பணக்காரனாக இருந்தபடியால், இந்த வார்த்தைகளை கேட்டவுடனே, மிகவும் துக்கப்பட்டு ஆண்டவரை விட்டு போய்விட்டான். ஆண்டவரோ! ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைந்தாலும் பணத்தின் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது என்றார். பேதுருவோ! ஆண்டவரே நாங்கள் எல்லாவற்றையும் இழந்து உம்மை பின் பற்றினோமே என்றான். ஆண்டவரோ! எனக்காக நீங்கள் இழந்த எல்லாவற்றையும் நூறுமடங்கு அடைந்து, மறுமையிலே நித்திய ஜீவனையும் பெறுவீர்கள் என்றார்.

டியர் குட்டிஸ் ! அந்த தலைவன் தன்னுடைய சொத்து (பணம், ஆஸ்தி) தான் பெரிது என அதனை நம்பி, ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போய்விட்டான். இன்னும் நிறைய பேர் பணம், படிப்பு, பதவி ,சொத்து, உறவு தான் வாழவைக்கும் என நம்பி ஆண்டவரை விட்டு, தூரமாய் விலகிபோய், உண்மையிலேயே ஆண்டவரையும் ஆண்டவரினால் வரும் இவ்வுலக ஆசிர்வாத வாழ்வையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் இழந்து விடுகிறார்கள். நாம் அப்படி இருக்கக் கூடாது. ஆண்டவருக்காக எல்லாவற்றையும் இழக்கலாம், எதற்காகவும் ஆண்டவரை இழக்க கூடாது.

**மனை வசனம் :- பிலி 3 : 7**

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று விட்டேன்.



**ஒரு வரியில் விடை எழுதுக:**

1. நித்திய ஜீவனை பெற ஆண்டவரிடம் கேட்டது யார்?

2. அந்த தலைவன் ஏன் துக்கப்பட்டான் ?

3. நமது நம்பிக்கையை எதின் மேல் வைக்ககூடாது ?

4. நாம் எதற்காகவும் யாரை இழக்ககூடாது?

## "விசுவாசமே முக்கியம்" 4

**வசனபகுதி : லூக்கா 18 : 34 – 43**


**சம்பவ சுருக்கம் :**

ஆண்டவர் இயேசு எரிகோ ஊர் வழியாக போனார். அவர் ஊருக்கு மிக அருகில் வரும்போது, வழியிலேயே உட்கார்ந்து ஒரு பார்வையற்றவர் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தார். ஜனங்கள் கூட்டமாக ஆண்டவரின் பின்னும், முன்னும் நடந்தார்கள். அவனோ, 'இது என்ன கூட்டமாக போகிறீர்கள் என்று கேட்டான். ஆண்டவராகிய இயேசு செல்கிறார் என்பதை அவர்கள் அவனுக்கு அறிவித்தார்கள். உடனே, 'இயேசுவே! தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கி உதவி செய்யும் என்று ஆண்டவரை கூப்பிட்டான். ஜனங்கள் எல்லாம் அவனை சத்தம் போடாதே என அதட்டினார்கள். அவனோ, இன்னும் அதிகமாய் சத்தமாக கூப்பிட்டான் . ஆண்டவர், உடனே நின்று அந்த கண்பார்வையற்றவரை தன்னிடம் அழைத்துவரச் சொன்னார். அவன் கிட்ட வந்த உடனே, ஆண்டவர் அவனிடம் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அவனோ! ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்; 'நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இந்த நபர் பார்வையடைந்து தேவனை துதித்தார். அதனை கண்ட ஜனங்களும் தேவனை துதித்து புகழ்ந்தார்கள்.

டியர் குட்டிஸ்! அந்த அண்ணனை பார்த்தீர்களா! அவன் ஜனங்களிடம் பிச்சை கேட்டார்; ஆனால், ஆண்டவர் இயேசுவிடமோ பார்வையை கேட்டார். ஏன்? ஆண்டவரால் தான் அது முடியும் என விசுவாசித்தான். ஜனங்கள் அவனை அதட்டிய போதும், அவன் இன்னும் அதிக சத்தமாக ஆண்டவரை நோக்கி கூப்பிட்டான். அதினால் அவனுக்கு பார்வை கிடைத்தது .நாமும் ஆண்டவரிடம் விசுவாசத்துடன் கேட்கவேண்டும். அப்பொழுது பெற்றுக்கொள்வோம். யார் தடுத்தாலும் ஜெபிப்பதை விட்டுவிடக்கூடாது.

**மனை வசனம் : யாக் 5 : 15**

**" விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் "**



**நிரப்புக :**

1. ஆண்டவர் ....... ஊருக்கு சென்றார்.

2.பார்வையற்றவர் ....... கேட்டுக்கொண்டிருந்தார்

3.அவன் இயேசுவிடம் ...... கேட்டான்.

4. இயேசு அவனுக்கு ....... கொடுத்தார்.

# ஜீவனுள்ளோரின் தேவன்

## The God of the Living

“அவர் மரித்தோருக்குத் தேவனாயிராமல்,
ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்....’’(மாற்கு 12:27)

**தேவன் ஜீவனுள்ளவர்** (உபா 5:26; 1தெச 1:9; எபே 4:6)

1. அவருக்கு ஆரம்பமும் இல்லை, அவருக்கு முடிவும் இராது; அவர் நித்திய நித்தியமாக இருக்கிறவர்.
2. வானம், பூமி மற்றும் எல்லா உயிரினங்களின் படைப்பாளி அவரே!
3. அவர் ஆவியாயிருக்கிறார் மேலும் தன்னை உண்மையுடன் ஆராதிக்க விரும்புகிறார்.
4. அவரால் உண்டான அனைத்தும் உயிர்வாழும்.

**கிறிஸ்து ஜீவனுள்ளவர்** (ஆதி 1:26; மத் 28:19; மத் 16:16; யோ6:51; எபி13:8; எபே 4:5)

1. அவர் ஆரம்பம் முதல் தேவனுடன் இருந்தார்.
2. கன்னி மரியாளிடம் உலகில் பிறந்தார்.
3. மனுஷ குமாரன் என்று அறியப்பட்டார்.
4. மாம்ச பிரகாரமாக மரித்தாலும், இன்றும் உயிரோடு உள்ளார்.

**பரி ஆவியானவர் ஜீவனுள்ளவர்:** (மத்28:19;2கொரி 3:3; 1பேதுரு1:21; எபே4:4)

1. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டார்.
2. வேத வசனத்தை எழுதும்படி அவர்களை வழிநடத்தினார்.
3. சத்தியத்திற்கு கீழ்படிகிற ஒவ்வொருவருக்குள்ளும் கொடுக்கப்படுகிறார்.

**மனிதன் ஜீவனுள்ளவன்** (ஆதி 1:26,27; 2:7; பிர 12:7; மத் 10:28; 14:26; ஓசியா 1:10; மத் 25:46)

1. தேவன் மனிதனைப் படைத்து அவனுக்கு ஆத்துமாவைக் கொடுத்தார்.
2. சரீரம் மரித்தாலும், தேவனிடமிருந்து வந்த ஆத்துமாவும் ஆவியும் மரிக்காது.
3. அவன் தன்னுடைய நித்தியத்தை ஏதோ ஒரு இடத்தில் (பரலோகம் / நரகம் ) கழிப்பான்.

**வேதாகமம் ஜீவனுள்ளது** (மத் 24:352 2தீமோ 3:1617; வெளி 22 :18,19; யாக் 1 :21, 22; யோ 12 :48)

1. பைபிளில் தேவனுடைய சித்தம் (திட்டம்) அடங்கியுள்ளது.
2. அதை ஒருக்காலும் அழிக்க முடியாது; மாறாக நிலைத்திருக்கும்.

3. ஜீவனைத் தரும் வல்லமை அதனிடமுண்டு.

4. ஒரு நாளில் உலகம் முழுவதையும் நியாயந்தீர்க்கும்.

**சுவிஷேசம் ஜீவனுடையது** (மாற்கு 16:15,16; ரோ1:16; 1தெச 1:9)

1. கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலை அடிப்படையாகக் கொண்டது சுவிஷேசம்.

2. இரட்சிக்கிற ஜீவனைத்தரும் வல்லமை அதனிடம் உண்டு.

3. தேவனுடைய வார்த்தையின் பக்கங்களிலும், அநேகருடைய வாழ்விலும் அது வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.

**கிறிஸ்தவர்கள் ஜீவனுள்ளவர்கள்** (கலா 3:26,27; 1 பேதுரு4:16; 2கொரி 5:17;1 பேதுரு2:2,3)

1. ஆவிக்குரிய ரீதியில் உயிரோடிருக்கும்படி ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும்.

2. அவர்கள் உயிரோடு இருப்பது மட்டுமல்ல, நித்திய வாழ்வின் நம்பிக்கையும் உடையவர்கள்.

**சபை ஜீவனுள்ளது** (மத் 16:18,19; கொலே1:18, எபே1:22,23; 4:1-6; 5:23-27; 1தீமோ 3:15)

1. சபைக்கு ஜீவனுள்ள அஸ்திபாரம் உண்டு.

2. அதற்கு ஜீவனுள்ள நாமம் உண்டு.

3. ஜீவனுள்ள இரட்சகர் சபைக்கு உண்டு.

4. ஜீவனுள்ள தலை உண்டு.

5. ஜீவனுள்ள அங்கத்தினர்கள் அதற்குண்டு.

**விசுவாசம் ஜீவனுடையது** (எபி 11:6; ரோ 10:10; யாக் 2:14-26)

1. தேவனைப் பிரியப்படுத்த ஒருவருக்கு விசுவாசம் வேண்டும்.

2. விசுவாசம் ஜீவனுடையதாக இருக்கு, அது கிரியை செய்கிறதாக இருக்க வேண்டும்.

3. அநேகருடைய வாழ்வில் விசுவாசம் உயிர்வாழ்கிறது.

4. அதுவே ஒருவரை பரலோகத்திற்கு கூட்டிச் செல்லும்.

"தேவன் தன்னுடைய ஜனங்கள், உயிருள்ள முன்மாதிரியாயிருக்கும்படி விரும்புகிறார்"

*அன்பு வாசக நண்பரே !*

*தமிழிலும், ஆங்கிலத்திலும் பிரசங்கக் குறிப்பு புத்தகங்கள் கிடைக்கும்*

விபரங்களுக்கு : சகோ. ஆண்டனி ராஜா (92 4431 4431)

# ஒரே தேவன் உண்டு

1. **(யோவான் 17.3):** ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று இயேசு ஜெபம் செய்தபோது, 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும்' என்று சொன்னபின்பு, 'நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்து என்று சொன்னார். இங்கே இயேசு, இரண்டு பேரைக்குறித்து அறிகிற அறிவுதான் நித்திய வாழ்வு என்று சொல்லுகிறார். இயேசுவே அந்த ஒன்றான மெய்த்தேவனாக இருந்தால், இல்லாத வேறொருவரைக்குறித்து அறிந்துக்கொள்ள வேண்டுமென்று இயேசு ஏன் ஜெபம் செய்தார்? இந்த வசனத்தில் ஒரே மெய்யான தேவனையும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற அறிவின் பிரதிபலன் நித்திய வாழ்வாகும் என்பதே இயேசுவின் ஜெபமாகும்.

2. **(1கொரி 8:6):** 'பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு'. இந்த வசனத்தில் தகப்பனாகிய ஒரே தேவன் உண்டு என்றும், இயேசு கிறிஸ்து என்னும் ஒரே ஆண்டவர் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. **(1தீமோ.2:5):** 'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே, இயேசு மத்தியஸ்தராய் இருக்கிறார். மத்தியஸ்தர் ஒருவனுக்குரியவர் அல்ல, தேவனோ ஒருவர் (கலா. 3:20). மத்தியஸ்தர் என்கிற ஒருவர் இருந்தால், அங்கே இரண்டு சாரார் இருக்க வேண்டும், அவ்விரண்டு சாராருக்கும் இடையேயுள்ள பிரச்சனைத் தீர்க்கப்பட்டு, இரு வகையாருக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தத்திற்கு மத்தியஸ்தர் சாட்சியாய் இருக்கிறார். அப்படிப்போலவே இயேசுவும், தேவனுக்கும் உலகத்துக்கும் இடையேயுள்ள 'பாவம்' என்னும் பிரச்சனைத் தீர்க்கப்பட்டு புதிய ஒப்பந்தம் (புதிய உடன்படிக்கை) ஏற்பட்டதற்கு மத்தியஸ்தராய் இருக்கிறார். ஆனால் தேவன் என்றைக்கும் ஒருவராகவே இருக்கிறார். ஆகையால் பிதாவாகிய தேவன் என்கிற ஒருவர் இல்லை, அவரேதான் இயேசு என்று சொல்வோமாகில், இயேசு மத்தியஸ்தர் என்கிற வார்த்தை அர்த்தமில்லாததாகிவிடும். ஏனென்றால், அவரே தேவனாகவும் அவரே மத்தியஸ்தராகவும் இருக்க

முடியாது. இயேசுவைத்தவிர வேறொரு தேவன் இல்லை என்று சொல்லப்படுமானால், இல்லாத தேவனுக்கும் உலகத்திற்கும் இடையே இயேசு எப்படி மத்தியஸ்தராக இருக்கமுடியும்? ஆனால் இயேசு தேவனிடத்திலிருந்த தேவனாகவும் (யோவா. 1:1-2) மனுஷரிடத்தில் வாழ்ந்த மனிதனாகவும் (1 தீமோ. 2:6) இருந்தபடியினால் அவர் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார் (எபி.9:15).

4. **(மாற்கு. 12:29-32)**: இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, 'நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்' என்று சொன்னார். இங்கே வேதபாரகன் தேவனுடைய கற்பனைகளில் பெரிய கற்பனை எது என்று இயேசுவினிடத்தில் கேட்டான். அதற்கு இயேசு நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே என்று சொன்னார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று இயேசு சொல்வதினாலே, இயேசுவுக்கும் வேதபாரகனுக்கும் ஒரே தேவன் உண்டு என்பதை இயேசு இங்கே சொல்கிறார்.

> தேவனுடைய வேலையை செய்வது
> எப்படி ஆசீர்வாதமோ, அதேப்போல
> தேவனுடைய வேலையை
> செய்யாதிருப்பதும், அதனை
> அலட்சியமாக செய்வதும் சாபம்.
> எரேமியா 48:10

5. **(1கொரிந்தியர். 12:5-6, எபேசியர். 4:5-6)**: ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே' பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வசனங்களில் எல்லாருக்கும் ஒரே கர்த்தர்; அதாவது, ஒரே ஆண்டவர் உண்டு என்றும், மேலும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிதாவாகிய தேவன் எல்லார்மேலும் எல்லாருக்குள்ளுமிருந்து எல்லாவற்றையும் நடப்பிக்கிற ஒரே தேவனானவர்; 'ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்' (அப். 17:28)

6. **(1கொரிந்தியர் 15:27-28)**: 'சகலகத்தையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பது வெளயரங்கமாய் இருக்கிறது. சகலமும் அவருக்கு கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு குமாரன் தாமும்

தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். மேற்கண்ட வசனங்களில் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய குமாரனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்பது வெளிப்படையாய் இருக்கிறது. ஆகவே தேவனே சகலத்திலும் சகலமமாயிருக்கும்படி, குமாரானகிய இயேசுவும் அவருக்குக் கீழ்படுத்தப்பட்ட சகலமும் பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது என்பதே இந்த வசனங்களின் அர்த்தமாகும்.

மேற்கண்ட வசனங்களின் மூலமாக பிதாவாகிய தேவனைக் குறிப்பிடும்போது அவர் ஒன்றான மெய்த்தேவன் என்றும், பிதாவாகிய ஒரே தேவன் தேவன் ஒருவரே என்றும், ஒரே தேவன் உண்டு அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை என்றும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு என்றும், அவர் எல்லாவற்றையும் குமாரனுக்குக் கீழப்படுத்தினவர் என்றும் வேதம் சொல்லுவதை அறிந்து கொள்ளுகிறோம். அப்படியே இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் குறிப்பிடும்போது தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும், ஒரே ஆண்டவர் (கர்த்தர்) என்றும், ஒரே மத்தியஸ்தர் என்றும் தமக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட எல்லாவற்றோடும் பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறவர் என்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

– தொடரும்

– சகோ. V. **ஆசீர்வாதம்** (திருவெற்றியூர்)

ஆவிக்குரிய விஷயங்கள் அனைத்திற்கும், வேதாகமத்தை (பைபிள்) மட்டுமே முழு ஆதார புத்தகமாக கிறிஸ்துவின் சபை அறிந்துள்ளது.

## நமது ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

- TV. நிகழ்ச்சிகளைப் பார்க்கும் அனைவரும் சத்தியத்தை கற்று விடுதலைப் பெற...
- ஓரிசாவில் நாம் நடத்தும் ஊழியப் பயிற்சி வகுப்பில் பயிலும் 22 மாணவர்களுக்காகவும், அவர்கள் கிறிஸ்தவர்களாக வாழவும் ஊழியம் செய்யவும் கூடாதபடி ‘எதிர்க்கும் நபர்கள்’ கட்டுப்படுத்தப்பட...
- ஓரிசாஊழியத்தின்போது இம்மாதம்– நமது ஆசிரியர், சகோ. ஆண்டனி மற்றும் சகோ. பாணி ஆகியோரை வன்முறையாளர்களிடமிருந்து தேவன் காத்ததற்காக...
- சென்றமாதம் மதுரை, சென்னை, ஓரிசா, திண்டிவனம் மற்றும் புதுச்சேரி கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதற்காக...
- இம்மாதம் நடைபெறும் கவரப்பேட்டை, பெங்களூர் மற்றும் ஊட்டி கூட்டங்களுக்காக...

பாடம் 2

# ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள்

## Early Christian Documents

- Richard N. Ady

இதுவரை, யூத மற்றும் ரோம வரலாற்று ஆசிரியர்களின் சாட்சியங்களைக் கேட்டோம். ரோம வரலாற்றில் கிறிஸ்து எழுப்பியிருந்த விளைவையும் கண்டோம். இந்தப் பாடத்தில், ஆதி சபையின் முன்னோடிகளின் எழுத்துக்களை ஆய்வு செய்து, முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைத்தார்கள் என்பதைக் காண்போம்.

**ரோமாபுரியைச் சேர்ந்த கிலெமெண்ட்**

கிலெமெண்ட் என்பவர் கி.பி. 30-ல் பிறந்தார்; அப்போஸ்தலர்கள் காலத்தில் வாழ்ந்தார். அவர் ரோமாபுரியில் கி.பி.92-100-ல் பிஷப்பாக இருந்தார். கி.பி.95-ல் கொரிந்தியர்களுக்கு ஒரு நிரூபம் எழுதினார். பிலிப்பியர் 4:3-ல் குறிப்பிடப்படுகிற கிலமெந்து என்பவர் இவராக இருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர். அவர் எழுதின முதல் நிரூபத்தின் 32-ம் அதிகாரத்தில் கொரிந்தியர்களுக்கு, கிலெமெண்ட் எழுதியதாவது, "யாக்கோபு, தனது சகோதரனுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் தாழ்மையுடன் தனது சொந்த நாட்டிலிருந்து லாபானிடத்துக்குப் போய் அங்கே சேவை செய்தான்; அங்கே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் செங்கோல் அவனிடம் கொடுக்கப்பட்டது. ...அவனுடைய (வம்சாவளியில்) மாம்சப் பிரகாரமாக இயேசு கிறிஸ்து பிறந்தார்".

அதிகாரம் 24-ல் கிலெமெண்ட் எழுதுகிறார், "பிரியமானவர்களே, கர்த்தர் எப்படி தம்மை நமக்குத் தொடர்ந்து நிரூபித்து வருங்கால உயிர்த்தெழுதலையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முதற்பலனானவராக்கும்படி அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்".

ஒரு சபையின் முன்னோடியால் எழுதப்பட்ட பிந்தியகால திருமறைக்காலத்தின் பூர்வீகப் பதிவேடு இன்றும் இருக்கிறது. இயேசு யாக்கோபின் சந்ததியில் மாம்சத்தில் வந்தவர் என்பதையும், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம்,

நாமும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம் என்று நிரூபிக்கும்படி செய்தார்.

**இக்னேஷியஸ்**

இக்னேஷியஸ், சிரியாவிலுள்ள அந்தியோக்கியாவில் கி.பி. 107-110 ல் பிஷப்பாக இருந்தார். ஆதி சபை முன்னோடிகள் எழுதிய முக்கிய பதிவேடுகளில் இவருடைய ஏழு நிரூபங்களும் இடம் பெற்றுள்ளன. கி.பி. 117ல், டிரேஜன் எனும் சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்த போது, இக்னேஷியஸ் சிங்கத்தின் கெபியில், ரோமாபுரியில் போடப்பட்டார். தனது நிரூபங்களில், இயேசுவின் தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் வலியுறுத்தி இக்னேஷியஸ் எழுதியிருந்தார். தண்டிக்கப்படும்படி அவர் ரோமாபுரிக்கு போகும் பாதையில், அவர் ஒரு நிரூபத்தை எழுதி அதில் இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவை ஒரு வரலாற்றுச் சம்பவம் என்று குறிப்பிட்டார்:

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனால் முன் குறிக்கப்பட்டபடியே, மரியாளின் கர்ப்பத்தில், தாவீதின் வித்தாக, ஆனால் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டார்". அவர் பிறந்தார் ஞானஸ்நானம் பெற்றார், அவருடைய அளவு கடந்த நிலையில் தண்ணீரைக் கூட அவர் சுத்திகரித்தார்" (எபேசியர் 18).

தாவீதின் வம்சாவளியான இயேசு, மரியாளின் குமாரன், உண்மையாகவே பிறந்து, புசிந்தார் குடித்தார், பொந்தியு பிலாத்துவின் கீழ் உண்மையாகவே துன்புறுத்தப்பட்டு, வானத்திலுள்ளோர் பூமியிலுள்ளோரின் பார்வையில் உண்மையாகவே சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, அவருடைய பிதாதாமே அவரை எழுப்பினார், அதே போல அவரை விசுவாசிப்போராகிய நம்மையும் எழுப்புவார்" (டிரேல்லியன்ஸ் 9).

இக்னேஷியஸ் தொடர்ந்து "அவர் மெய்யாகவே'', அவர் உண்மையிலேயே மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியும், ஆனால் தெய்வீக சித்தத்தின்படியும் வல்லமையின் படியும் உண்மையிலேயே கன்னிகையினிடத்தில் பிறந்து, யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லா நீதியையும் நிறைவேற்றி, உண்மையிலேயே மாமிசத்தின்படி பொந்தியு பிலாத்து, காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதின்

ஆட்சியின் கீழ் ஆணியில் அறையப்பட்டார்; தாம் உயிர்த்தெழுந்ததின் மூலம் அனைத்து யுகங்களினூடே ஒரு அடையாளச் சின்னமாகத் திகழுகிறார். எனக்குத் தெரியும், நான் விசுவாசிக்கவும் செல்கின்றேன். அவர் உயிர்த்தெழுந்த பின்பும் மாமிசத்தில் இருந்தார்; அவர் பேதுருவிடத்திலும் அவருடைய சகாகக்களிடமும் வந்தபோது, அவர் அவர்களிடம், என்னைத் தொட்டு பிடித்துப் பாருங்கள், நான் ஒரு சரீரமற்ற பிசாசு அல்ல என்றார். அவர்கள் அவரைத் தொட்டுப்பார்த்து, விசுவாசித்தார்கள்; அவருடைய சரீரத்தோடும், இரத்தத்தோடும் சேர்ந்தார்கள். ஆகையால் அவர்கள் மரணத்தைப் பார்த்து பரியாசம் பண்ணி, இல்லை, தங்களை மரணத்து மேலானவர்களாய் கண்டார்கள். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர்களோடு புசித்தார், குடித்தார்'' (சிமிர்னாக்காரர்கள் 1).

மக்னீயர்களுக்கு எழுதின தனது நிரூபத்தில் (கி.பி. 110-115), இக்னேஸியஸ் எழுதினதாவது, ''பொந்தியு பிலாத்துவின் தேசாதிபத்தியத்தின் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளான பிறப்பு, உணர்ச்சி வேகங்களுக்குட்படுதல், உயிர்த்தெழுதலைக் குறித்து முழுமையாய் ஒப்புக் கொள்ளுங்கள்; இந்தக் காரியங்களெல்லாம் உண்மையாக நிச்சயமாக இயேசுவால், நமது நம்பிக்கைக்காக நடப்பிக்கப்பட்டன.”

இக்னேஸியஸ் எழுதினவைகளில் அதிகமானவைகளில், தாங்கள் மட்டுமே ஆத்ம அறிவு சார்ந்தவர்கள் என எண்ணி, இயேசுவின் ‘மாம்சத்தையும் – இரத்தத்தையும்’ உடைய மனுஷீகத்தை ஏற்றுக்கொள்ளாத நம்பிக்கை கொண்டிருந்தவர்களைச் சாடத்தக்கதாக எழுதினார். கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மறுத்து, கிறிஸ்தவ தொழுது கொள்ளும் பழக்கம் நான்காம் நூற்றாண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தர்க்கித்தும் பேசின, இன்றை தெய்வ நம்பிக்கையில்லாதவர்களுக்கும் இவை போதனைகளாக உள்ளன. இக்னேஸியஸின் நிரூபங்கள் மூலமாக, முதல் நூற்றாண்டில் துவக்கத்தில் இருந்த கிறிஸ்தவர்கள், இயேசு முற்றிலும் மனுஷீகம் உள்ளவராகவும் முற்றிலும் தெய்வீகமுள்ளவராகவும் இருந்தார் என்று விசுவாசித்தார்கள் என்பதை இக்னேஸியஸின் நிரூபங்கள் ஆதாரமளிக்கின்றன: இயேசு முற்றிலும் தெய்வம், முற்றிலும் மனுஷீகம் உள்ளவராயிருந்தார்.

**அரிஸ்டைட்ஸ்**

அரிஸ்டைட்ஸ் ஒரு தத்துவ ஞானியாகவும், பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனாகவுமிருந்தார். கி.பி.125-ல் ஹாட்ரியன் எனும் சக்கரவர்த்தி அத்தனே (ஏதேன்ஸ்) நகரைப் பார்வையிடப் போன போது, அரிஸ்டைட்ஸ் அவருக்கு தேவனைக் குறித்த தற்பாதுகாப்புடன் கூடிய பயபக்தியை முன்வைத்தார். அரிஸ்டைட்ஸின் பரிந்துரை பின்வரும் கருத்துக்களையும் உள்ளடக்கியது.

“கிறிஸ்தவர்கள், தங்களுடைய மார்க்கத்தின் துவக்கத்திற்கு ஆதாரமாக மேசியாவாகிய இயேசுவிடமிருந்து வந்ததாக அடையாளம் காட்டுகின்றனர்; அவர் உன்னதமான தேவனுடைய குமாரன். தேவன் பரலோகத்திலிருந்து கீழே வந்ததாகவும், எபிரேய கன்னிகையினிடத்தில் பிறந்ததாகவும், அப்பொழுது மாமிச சரீரத்தைப் பெற்றுப்பிறந்ததாகவும் கூறப்படுகிறது; தேவனுடைய குமாரன் ஒரு மனுஷ குமார்த்திக்குள் வாழ்ந்தார். இவைகளெல்லாம் அவர்களுக்குள் கொஞ்ச காலம் மட்டுமே பிரசங்கிக்கப்பட்டவை, சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிற புத்தகங்களில் இவைகள் போதிக்கப்படுகின்றன; நீங்களும் கூட அவைகளை வாசித்துப் பார்ப்பீர்களேயானால், அதற்குள் இருக்கிற வல்லமையை கண்டுணர்வீர்கள். இந்த இயேசு, எபிரேய இனத்தில் பிறந்தவர்; தாம் மனுஷ அவதாரம் எடுத்து வந்ததன் நோக்கம் நிறைவேற்றப்படும் பொருட்டு, அவர் பன்னிரண்டு சீஷர்களைத் தமக்குக் கொண்டிருந்தார். ஆகிலும் அவர்தாமே யூதர்களாலே அவர் குத்தப்பட்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்; மூன்று நாளைக்குப் பின்பு அவர் உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்றார் என்று சொல்லுகிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த பன்னிரண்டு சீஷர்களும் உலகத்தின் தெரிந்த பகுதிகளுக்கெல்லாம் சென்றனர், செல்லுமிடமெல்லாம் அவருடைய மகத்துவத்தைத் தன்னடக்கத்தோடும் நேர்மையோடும் கூறிக் கொண்டே இருந்தார்கள். அன்று துவக்கம் இன்று வரை அந்தப் பிரசங்கத்தை விசுவாசிக்கிற யாவரும் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர், அவர்கள் பிரசித்தமாகிறார்கள்”.

- தொடரும்

- (தமிழில்) **கிங்ஸ்லி ராஜா**

ஒருவர் ஒரு முறை இரட்சிக்கப்பட்டு
விட்டடால், அந்த இரட்சிப்பை இழந்து
போகவே முடியாது என்று கடவுளால்
அருளப்பட்ட வசனம்
எங்குமே சொல்வதில்லை

## இம்மாதக் கேள்விகள்

1. மிகுதியான கிலேசத்தினாலும் விசாரத்தினாலும் விண்ணப்பம் பண்ணியவள் யார்?
2. கர்த்தருடைய வேலையை அசதியாக செய்கிறவன் .................?
3. தேவன் எதிலே தன்னை வஞ்சத்தீர்கள் என்கிறார்?
4. வேறே தேவர்களை பின்பற்றினால் என்ன வரும் என்கிறார் மோசே?
5. அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் யார்?
6. நாகமானின் குஷ்டரோகம் யாருக்கு வந்தது?
7. வேதபாரகர் பரிசேயரை காட்டிலும் நம்முடைய நீதி எப்படி இருக்க வேண்டும்?
8. நாம் எந்த பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்க கூடாது?
9. தன் கண்களை ஏழைக்கு விலக்குகிறவனுக்கு என்ன கிடைக்கும்?
10. கிறிஸ்துவினுடையவர்கள் எதனை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்?

## பொதுவான செய்திகள்

1) வெடிபட்டு தீக்காயம் ஏற்பாட்டால், குளிர்ந்த நீரில் நன்றாக கழுவி விட்டு, பின் மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

2) தேனை வெந்நீரில் கலந்து அருந்தினால், பருத்த உடல் மெலியும்.

3) காலை உணவு எதுவும் உட்கொள்ளாமல் தினமும் இரண்டு தக்காளி பழம் மட்டும் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும். ஆனால், வலு குறையாது.

4) "வாய் விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும்" எப்படி தெரியுமா? நாம் வயிறு குலுங்க சிரிக்கும் போது, "ஹஹஹ" என சத்தம் ஏற்படும், இந்த சத்தம் தொடர்ச்சியாக வெளிப்பட்டால், மின்னதிர்வுகள் உடலில் பரவி, சுரப்பிகள் இயங்கும் திறன் அதிகமாகும். ரத்த ஓட்டம் சீராகும். இதயத்திற்கும் வயிற்றிற்கும் இடையே உள்ள தசைகள் முழு வேகத்தில் புத்துணர்ச்சி பெறும்.

5) நகைச்சுவை உணர்வுகள், மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்கிறது.

6) கேசரி செய்யும் போது தண்ணீருக்கு பதிலாக தேங்காய் பாலில் சமைத்தால் சுவை அதிகமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோதரி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 5:6 | 6. 2பேதுரு 1:21 |
| 2. கொலோ 1:18 | 7. யோவான் 3:34 |
| 3. ஆதி 16:13 | 8. நீதி 19:17 |
| 4. 2கொரி 4:4 | 9. கலா 3:27 |
| 5. எபே 4:6 | 10. நீதி 1:7 |

## அக்டோபர் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G. ஜெம் ரெல்டன் – விருதுநகர்
2. T. கிரேஸிலின் சிபியா – புதுக்கோட்டை
3. Miss. பவுலின எட்வின் – நரிமேடு
4. D. டேஃனி – சென்னை
5. D. ஜீனித்தா – சென்னை
6. X. ஜோசுவா – மணப்பாறை
7. J. ஜெருசா – படப்பை
8. A. அபிஷேக் சாம்லின் – நெல்லை
9. J. ஜெரால்டு பிரின்ஸ் – மணப்பாறை
10. J. பியூலா – மணப்பாறை
11. R. சேம் – உக்கிரங்கோட்டை
12. V. ஷைனி – மதுரை
13. V. ஷாலி – மதுரை
14. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
15. J. கஸ்தூரி – மதுரை
16. ஜோசுவா டேவிட் – பெங்களூர்
17. R. கௌசந் – திருப்பூர்

## அக்டோபர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
2. Mrs. தெல்மா ஸ்டான்லி – முடக்காத்தான்
3. Mrs. ஜெமிமா நல்லையா – நரிமேடு
4. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
5. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
6. Mrs. ஜாஸ்மின் வின்சென்ட் – மதுரை
7. Mrs. மேரி ராஜ் – கே.கே.நகர்
8. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
9. Mrs. ஞான சிரோன் மணி – சமயநல்லூர்
10. Mrs. உமா ஜெயகரன் – மதுரை
11. Mrs. ரூபி வசந்தா – மேலப்பொன்னகரம்
12. Mrs. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
13. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
14. Ira. எத்திராசன் – சங்கரி
15. Mrs. ரேச்சல் தமிழரசி – பசுமலை
16. K. மேரிலட்சுமி – அதியமான்கோட்டை
17. R. மரிய ஜோசப் – முடிச்சூர்
18. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
19. Mrs. ஹெலன் திலக் – ஞானஒளிவுபுரம்
20. Y. ஜெயசுதா – சென்னை
21. R. சரோஜா – தென்கலம்
22. V. மெர்ஸி – செட்டிபாளையம்
23. Miss. விஜி பிரியங்கா – செட்டிபாளையம்
24. M. ராணி – செட்டிபாளையம்
25. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
26. P. சூரிய பிரியா – திருமங்கலம்
27. A. ஆனி விக்டோரியா – கொளத்தூர்
28. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
29. C. ரேச்சல் ஜீவகாந்தி – அஸ்தம்பட்டி
30. G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
31. Mrs. அபிகாயில் எஸ்தர் – படப்பை
32. M. புஷ்பராணி – நாமக்கல்
33. S.M. தவமணி தேவி – திருப்பூர்
34. Mrs. அன்பு சுகந்திரம் – ஏர்வாடி
35. J. கஸ்தூரி கலாவதி – மேலப்பொன்னகரம்
36. I. அலெக்சாண்டர் சாலமோன் –சிவகங்கை
37. Mrs. கேற்றி செல்லத்துரை – மே.தாம்பரம்
38. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
39. S. கேத்ரின் அருள்நேசம் – கிரம்மர்புரம்
40. N. ஞானசுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
41. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
42. Sis. லிசிராஜசேகரி – மறைமலைநகர்
43. D. ஸ்டெல்லா சொர்ணா – பெங்களூர்
44. A. சந்திரா – மதுரை
45. Mrs. புளோரா சுந்தர் – ஜம்புரோபுரம்
46. R. பால்ராஜ் – புரசைவாக்கம்
47. R.S. சங்கீதா – சென்னை
48. Mrs. ஞானசுந்தரி – போத்தனூர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !